KALANJIYAM – International Journal of Tamil Studies
ISSN 2456-5148 (Online)
ngmtamil.in

RESEARCH ARTICLE

# காலந்தோறும் தமிழும் பல்துறை அறிவும்

*Tamil and Multidisciplinary Knowledge Through the Ages*

**முனைவர் பேபிநிஷாந்தி மெ.**

னி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02, தமிழ்நாடு, இந்தியா., India

முனைவர் பேபிநிஷாந்தி மெ.: https://orcid.org/0009-0007-6605-967X

How to cite

மெ., மு. பே. (2026). காலந்தோறும் தமிழும் பல்துறை அறிவும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 18–27. https://ngmtamil.in/journal-article/%e0%ae%95%e0%ae%be%e0%ae%b2%e0%ae%a8%e0%af%8d%e0%ae%a4%e0%af%8b%e0%ae%b1%e0%af%81%e0%ae%ae%e0%af%8d-%e0%ae%a4%e0%ae%ae%e0%ae%bf%e0%ae%b4%e0%af%81%e0%ae%ae%e0%af%8d-

Vol. 10, No. 02 (September 2026), pp. 18–27

Received: 30 Sep 2026 · Accepted: 4 Oct 2026

© 2026 The Author(s). This open-access article is distributed under the terms of the CC BY 4.0 licence (https://creativecommons.org/licenses/by/4.0/).

Downloaded from ngmtamil.in on 5 October 2026

KALANJIYAM – International Journal of Tamil Studies
களஞ்சியம் – சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 2456-5148 (Online)

Vol. 10, No. 02 (September 2026), pp. 18–27
ngmtamil.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# காலந்தோறும் தமிழும் பல்துறை அறிவும்

*Tamil and Multidisciplinary Knowledge Through the Ages*

முனைவர் பேபிநிஷாந்தி மெ.*

னி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலக்ஷ்மி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02, தமிழ்நாடு, இந்தியா., *India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர் பேபிநிஷாந்தி மெ. — ngmcollegelibrary@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 30 September 2026 | — | — | 30 September 2026 |
| DOI | | Article ID / கட்டுரை எண் | |
| — | | KALN-2026-00008 | |

## ஆய்வுச்சுருக்கம்

தமிழ்மொழியின் வளர்ச்சியானது இலக்கியப் படைப்புகளின் எண்ணிக்கை பெருகிய வரலாறு மட்டுமல்ல. பல்வேறு அறிவுத் துறைகளுடன் இணைந்து வந்த வரலாறாகவும் அமைகிறது. சங்க இலக்கியங்களில் இயற்கை, நிலவியல், வேளாண்மை, காலநிலை, விலங்கியல், கடல்சார் வாழ்க்கை, வணிகம் போன்றவை மக்களின் வாழ்க்கை முறைகளைக் கொண்டு பதிவு செய்யப்பட்டுள்ளன. அற இலக்கியங்களில் மருத்துவம், அரசியல், பொருளாதாரம், ஒழுக்கவியல் போன்ற அறிவுத்துறைகள் முறையான சிந்தனைகளாக அமைகின்றன. காப்பியங்கள் இசை, நடனம், நாடகம், நகர அமைப்பு போன்ற கலை மற்றும் சமூக அறிவுகளைப் பதிவு செய்கின்றன. நவீன காலத்தில் அச்சு, அறிவியல் தமிழ், கலைச்சொல்லாக்கம், ஆகியவற்றின் வழியாக தமிழ் புதிய அறிவுகளை ஏற்றுக்கொள்கிறது. இன்றைய நிலையில் கணினித் தமிழ், இணையத் தமிழ், செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளுடன் தமிழ் இணைந்து வளர்ந்துள்ளது. இவ்வாறு சங்ககாலம் முதல் தமிழின் வளர்ச்சியைப் பல்துறை அறிவின் தொடர்ச்சியான பயணமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**Keywords / திறவுச்சொற்கள்:** தமிழ்; பல்துறை அறிவு; சங்க இலக்கியம்; அறிவியல் தமிழ்; கணினித் தமிழ்; செயற்கை நுண்ணறிவு.

## Abstract

The evolution of the Tamil language is not merely a history of the proliferation of literary works; it is also a journey intertwined with various fields of knowledge. Sangam literature documents aspects such as nature, geography, agriculture, climate, zoology, maritime life, and trade through the lens of people's lifestyles. Didactic literature incorporates fields like medicine, politics, economics, and ethics as structured systems of thought. Epic literature records knowledge regarding arts and society, including music, dance, drama, and urban planning. In modern times, Tamil has embraced new knowledge through printing, scientific Tamil, and the coining of technical terminology. Currently, the language has evolved alongside fields such as computer-based Tamil, internet-based Tamil, and artificial intelligence. Thus, this article presents the growth of Tamil from the Sangam era to the present as a continuous journey alongside multidisciplinary knowledge.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** மெ., மு. பே. (2026). காலந்தோறும் தமிழும் பல்துறை

அறிவும். KALANJIYAM – International Journal of Tamil Studies, 10(02), 18–27.

**முன்னுரை**

ஒரு மொழியின் ஆற்றலை அதன் இலக்கியச் செழுமையைக் கொண்டு மதிப்பிடுவது மட்டுமல்லாது, அம்மொழி மனிதனின் எத்தகைய அறிவுத் தேவைகளைப் பதிவு செய்துள்ளது என்பதும் அதன் வளர்ச்சியின் அளவுகோலாகும். தமிழ்மொழி தோன்றிய காலந்தொட்டே மனித வாழ்வின் பல்வேறு கூறுகளோடு இணைந்து வளர்ந்துள்ளது. தமிழரின் வாழ்க்கை இயற்கைச் சூழலோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது. இதன் காரணமாக நிலம், நீர், காலம், உயிரினங்கள், தொழில், வணிகம், உணவு போன்றவை இலக்கியப் பதிவுகளாக மாற்றமைந்துள்ளன. இதனை தொல்காப்பியரின் திணைக் கோட்பாட்டின் அடிப்படையில்,

**“மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்”**

**(தொல். பொருள். அகம். நூற்பா.5)**

என்று குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களையும் அவற்றுடன் தொடர்புடைய வாழ்வியலையும் சுட்டுகிறது. இது இலக்கிய வகைப்பாடு மட்டும் அல்லாமல் நிலவியல், சூழலியல், வாழ்வியல், தொழில், பண்பாடு ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் அறிவாற்றல் முறையாகவும் உணரமுடிகிறது.

**சங்கத் தமிழரின் இயற்கையறிவு**

சங்க இலக்கியத்தில் இயற்கை மனித உணர்வுகளுக்குப் பின்னணியாக மட்டும் காட்சிப்படுத்தவில்லை. அது தனக்கென ஒரு வாழ்வியல் அமைப்பைக் கொண்டதாக அமைந்துள்ளது.

குறுந்தொகையில்,

**“யாயும் ஞாயும் யாராகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்”**

**(குறுந்தொகை. பா. 40)**

இப்பாடலில் செம்மண்ணில் பெய்த மழைநீரானது அந்த மண்ணோடு இரண்டரக் கலந்து நிற்பது போல, நம் அன்பு கொண்ட நெஞ்சங்கள் தாமாகவே ஒன்றாய் கலந்துவிட்டன, என்று உவமை வழி காதல் உணர்வை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சங்க இலக்கிய பாடல்களின் பெரும்பான்மையாக மனித வாழ்க்கை நிலத்தோடும் பருவத்தோடும் இணைக்கப்பட்டுள்ளதை உணரமுடிகிறது.

குறிஞ்சி நிலத்தில் மலை, அருவி, காந்தள், குறிஞ்சி, யானை போன்ற இயற்கைக் கூறுகள், முல்லையில் காடு மற்றும் மேய்ச்சல் வாழ்க்கை, மருதத்தில் வயலும் உழவும், நெய்தலில் கடலும் மீன்பிடித்தலும், பாலையில் வறட்சியும் பயணமும் இடம்பெற்றுள்ளன. எனவே சங்ககால மக்களின் சிந்தனை சூழலை தனித்த பொருளாக அல்லாமல், மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கருதியிருப்பதை அறியமுடிகிறது.

**நிலவியல் பார்வை**

தமிழின் திணைக் கோட்பாடு, நிலவியல் சார்ந்த பார்வையை வெளிப்படுத்தும் வகையில் தலைசிறந்து விளங்குகிறது. தொல்காப்பியம் நிலத்தை ஐந்து திணைகளாக

வகைப்படுத்துவதோடு, ஒவ்வொரு நிலத்திற்கும் உரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகியவற்றையும் தொடர்புப்படுத்துகிறது.

**“முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

**நுவலுங் காலை முறைசிறந் தனவே.”**

**(தொல். பொருள். நூற்பா.3)**

நிலம், பொழுது ஆகியவை முதல்பொருளாகவும், அந்த நிலத்தோடு தொடர்புடைய இயற்கைக் கூறுகள் கருப்பொருளாகவும், மனித உணர்வு உரிப்பொருளாகவும் அமைந்துள்ளன. இங்கு நிலமானது புவியியல் பரப்பாக இல்லாமல், மனித வாழ்க்கை, தொழில், உணவு, உயிரினங்கள், பண்பாடு ஆகியவற்றைத் தீர்மானிக்கும் சூழலாக பார்க்கப்படுகிறது. எனவே திணைக் கோட்பாடு மக்களின் பழைய நிலவியல் அறிவைப் புரிந்துகொள்ள உதவும் முக்கியமான இலக்கியச் சான்றாக அமைகிறது.

சங்க காலத் மக்கள் நிலத்தின் தன்மை, ஈரப்பதம் மற்றும் மண்களின் நிறம் ஆகியவற்றை நுட்பமாக ஆராய்ந்து அவற்றைப் பயிர் விளைச்சலுக்கு ஏற்பப் பகுத்திருந்தனர். நீர் வளம் குறைந்து, கரடுமுரடான மற்றும் கடினமான மண் அமைப்பைக் கொண்ட குறிஞ்சி, முல்லை நிலப் பகுதிகளைச் சங்க இலக்கியங்கள் வன்புலம் என்றும், தீம்புனல் (நன்னீர்) பாய்ந்து வண்டல் படிந்த வளமான மருத நிலப் பகுதிகளை மென்புலம் என்றும் அழைத்தனர்.

புறநானூற்றில் மதுரை நக்கீரர் இயற்றிய பாடாண் திணைப் பாடலில் மென்புலத்து (வயல்) உழவர்கள், வன்புலத்து (முல்லை) எருதுகளைப் பயன்படுத்தி உழுவது இருவேறு நிலங்களின் பிணைப்பைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

**“வன்புலக் கேளிர்க்கு மென்புல மருங்கின்**

**விசிபிணி முழவின் பாணர் ஒக்கல்”**

**(புறம். பா - 395)**

இப்பாடலில் சோழ நாட்டின் வளமைக் குறித்து பாடும்போது வன்புலத்தில் வாழும் மக்களுக்கு, மென்புலமாகிய மருத நிலத்துச் செல்வங்களை வாரி வழங்குவதை புலவர் குறிப்பிட்டுள்ளார். எனவே தமிழர்கள் நிலத்தின் கடின, மென்மைத் தன்மைகளைத் துல்லியமாக அறிந்திருந்த செய்தியை அறியமுடிகிறது.

மழைநீரை மட்டுமே நம்பி உழவு செய்யப்படும் வறண்ட கரிசல் நிலத்தைப் 'புன்புலம்' என்று அழைத்து, அதில் விளையும் வரகு, தினைப் பயிர்களைப் பற்றி விவரிக்கும் அகநானூற்றுப் பாடலில் புலவர் இடைக்காடனார்,

**“கல்லென் கானத்துக் கட்கண் ஆமான்**

**புன்புல வரகின் பூப்போங் கணவற்…”**

**(அகம். பா - 194)**

பெருமழை பொழிந்த விடியற்காலையில், செம்மண் நிலத்தில் ஏர் பூட்டி உழுத நிலமானது ஊனைக் கிழித்தது போலச் சிவந்து காணப்பட்டன. அந்த ஈரமான செம்புழுதியில் விதைக்கப்பட்ட வரகு விதைகள் நன்றாக முளைத்து வளர்ந்துக் காணப்பட்டன. இதனை புலவர் மண்ணின் நிறம், அதன் கடினத் தன்மை, நீர்வளம் மிக்க ஆற்றுப் படுகை ஆகியவற்றைத் தங்களின் உழவுப் பட்டறிவால் வகைப்படுத்திய சங்ககால மக்களின் வாழ்வியல் அறிவை உணரச்செய்துள்ளார்.

**வேளாண் சிந்தனை**

சங்க இலக்கியங்களில் வேளாண்மை என்பது ஒரு தொழிலாக மட்டுமின்றி, ஒரு

வாழ்வியல் சிந்தனையாகவும், அறிவியல் நுட்பமாகவும் போற்றப்பட்டுள்ளது. நிலத்தைத் தெரிவுசெய்வது முதல் அறுவடை செய்து விதைகளைப் பாதுகாப்பது வரை மக்களின் வேளாண் சிந்தனை சிறந்து விளங்கிற்று.

வேளாண்மை மக்களின் பொருளாதார வாழ்க்கையின் அடிப்படையாக இருந்தது. மருதத்திணைப் பாடல்களில் வயல், நெல், நீர், உழவு, எருது, உழவர் போன்ற பல்வேறு பகுதிகளாக இடம்பெற்றுள்ளன. இதனை திருவள்ளுவர் குடிமையியல் அதிகாரத்தில் உழவின் அடிப்படைத் தன்மை குறித்து விளக்கியுள்ளார்.

**“சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்**

**உழந்தும் உழவே தலை.”**

**(குறள். 1031)**

என்று உலகத்தின் இயக்கத்திற்கு அடிப்படையாக அமையும் உழவுத் தொழிலின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

மேலும்,

**“உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது**

**எழுவாரை எல்லாம் பொறுத்து.”**

**(குறள். 1032)**

என்று உழவரின் சமூகப் பங்களிப்பையும் விவரிக்கிறது. இவ்விரு குறள்களும் வேளாண்மையை ஒரு தொழிலாகக் கருதாமல், சமூகத்தின் பொருளாதார அடித்தளத்தை எடுத்துரைக்கின்றது. இதன் மூலம் தமிழில் வேளாண் சார் அறிவு, பொருளாதாரச் சிந்தனை ஆகியவை இணைந்திருப்பதை அறிய முடிகிறது.

**இயற்கை வேளான்மை**

மனித முயற்சி இன்றி இயற்கையாகக் காடுகளிலும் மலைகளிலும் விளையும் தானியங்களை அறுவடை செய்யும் முறையும் சங்க கால மக்களிடம் இருந்துவந்துள்ளது. இது குறிஞ்சி நில மக்களின் வேளாண் சிந்தனையை அறியமுடிகிறது.

**“தொய்யாது வித்திய துளர்படு துடவை**

**ஐவன வெண்ணெல்”**

**(புறம். பா - 168)**

இங்கு தொய்யாது வித்திய என்றது நிலத்தை மனிதர்கள் உழாமல், தானாகவே காட்டில் முளைத்து வளர்ந்த மலைநெல் என்று பொருள்படும். இயற்கையோடு இயைந்த உழவுச் சிந்தனைக்கு இதுவொரு சிறந்த சான்றாக விளங்குகிறது. வேளாண்மை வயல் வேலை மட்டுமல்ல. அது நீர்ச் சேமிப்பு, விதை மேலாண்மை, மண் வளம் காத்தல், மனிதப் பண்பாடு ஆகிய அனைத்தையும் உள்ளடக்கிய ஒரு வாழ்வியல் சிந்தனையாக அமைகிறது.

**நீர் மேலாண்மையும் வேளாண்மையும்**

மழைநீரையும், ஆற்று நீரையும் தேக்கி வைத்து வேளாண்மை செய்ய வேண்டும் என்ற நீர்ப்பாசனச் சிந்தனை சங்ககால மக்களிடம் காணப்பட்டுள்ளது. நீரின்றி வேளாண்மை இல்லை எனும் செய்தியை புறநானூற்றுப் பாடலில் மன்னர்களுக்குப் புலவர்கள் அறிவுறுத்துமாறு குடபுலவியனார் இயற்றியுள்ளார்.

**“நிலன்நெளி மருங்கின் நீர்நிலை பெருகத்**

**தட்டோ ரம்ம, இவண் தட்டோ ரே**

**தள்ளாதோரே தள்ளாதோரே.”**

**(புறம். பா - 18)**

பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்குப் பாடிய இப்பாடலில், நிலம் தாழ்வாக உள்ள பகுதிகளில் எல்லாம் ஏரிகளை அமைத்து நீர்நிலைகளைப் பெருக்க வேண்டும் என்றும், அவ்வாறு செய்பவர்களே உலகில் அழியாப் புகழைப் பெறுவார்கள், செய்யாதவர்கள் வீணே மடிவார்கள் என்றும் வேளாண்மைக்கான நீர் மேலாண்மைச் சிந்தனைக் குறித்து இயற்றியுள்ளார்.

நீரானது மக்களின் வாழ்வியலில் இன்றியமையாத ஒன்றாகும். வேளாண்மை மட்டுமன்றி, குடிநீர், உணவு உற்பத்தி, கால்நடை, மனித வாழ்வு ஆகிய அனைத்திற்கும் நீர் அடிப்படை ஆதாரமாக அமைகிறது.

இந்நீரின் முக்கியத்துவம் குறித்து திருவள்ளவர் வான்சிறப்பு அதிகாரத்தில்,

**“வான்நின்று உலகம் வழங்கி வருதலால்**

**தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று.”**

**(குறள். 11)**

என்றும்,

**“நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்**

**வானின்றி அமையாது ஒழுக்கு.”**

**(குறள். 20)**

என்றும் நீரின்றி உலக வாழ்க்கை இயங்காது என்ற அடிப்படைச் சூழலியல் சிந்தனையை இக்குறள்களின் வாயிலாகக் குறிப்பிட்டுள்ளார்.

சங்க இலக்கியங்களில் ஆறு, குளம், ஏரி, அருவி, மழை போன்ற நீராதாரங்கள் பல்வேறு சூழல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதனால் சங்க கால மக்களின் பழைய இலக்கியங்களை நீரியல் மற்றும் சுற்றுச்சூழல் வரலாற்று ஆய்வுகளுக்கான துணைமை ஆதாரங்களாகவும் துணைநிற்கின்றன.

**மருத்துவ மரபறிவு**

நம் முன்னோர்களின் மருத்துவச் சிந்தனை மிகவும் பழமையானது. உடல் நலம், நோய், உணவு, மருந்து, உடல் சமநிலை போன்ற கருத்துகள் இலக்கியங்களில் காணப்படுகின்றன. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என நோயில்லாத் தன்மையையே நம் முன்னோர்கள் செல்வமாகக் கருதினார். சங்க கால மக்கள் தங்களைச் சுற்றியுள்ள தாவரங்களின் மருத்துவக் குணங்களை நன்கு அறிந்தவர்கள்.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றான சிறுபஞ்சமூலம் மருத்துவப் பெயரையே தன் நூலின் பெயராகக் கொண்டு அமைந்துள்ளது. ஐந்து வகையான மூலிகைகளைக் கொண்டு நோயை நீக்குவது போல, ஐந்து வகையான அறக்கருத்துகள் மனித வாழ்வின் தீமைகளை நீக்கும் என்ற அறக்கருத்துக்களை விளக்குகிறது.

சிறுபஞ்சமூலம் என்ற பெயரே ஒரு முக்கியமான மருத்துவக் குறிப்பைத் தருகிறது. கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகிய ஐந்து வேர் பொருட்களின் தொகுப்பாகும். இவை சித்த மருத்துவத்தில் பல்வேறு நோய்களுக்குப் பயன்படும் மூலிகைகளாகப் பயன்பட்டுவருகின்றன.

**“சிறிய வழுதுணைவேர் சின்னெருஞ்சி மூலம்**

**சிறுமலி கண்டங்கத்தரிவேர் நறிய**

**பெருமலி ஓர்ஐந்தும் பேசுபல் நோய் தீர்க்கும்**

**அரிய சிறுபஞ்சமூலம்.”**

**(பதார்த்த குண சிந்தாமணி. பா. 495)**

இங்கு மருத்துவச் சிந்தனையானது சங்ககால மக்களின் பழந்தமிழ் வாழ்வியலில் உணவு, உடல் நலம், மூலிகை மற்றும் நோய் தீர்த்தல் ஆகியவை ஒன்றையொன்று சார்ந்தது என்பதை எடுத்தியம்புகிறது. மருந்தானது நோய் ஏற்பட்ட பின் பயன்படுத்தப்படுவதல்ல. நோய் வராமல் உடலைப் பாதுகாக்கும் வாழ்க்கை முறையையும் குறிப்பிடுகிறது. எனவே சிறுபஞ்சமூலம் மக்கள் மூலிகையின் மகத்துவத்தை அறிந்திருந்ததையும், உடல்நலச் சிந்தனையையும் வெளிப்படுத்தும் இலக்கியச் சான்றாக அமைந்துள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் மருத்துவக் குறிப்புடன் அமைந்த மற்றொரு நூல் ஏலாதி ஆகும். உடல் நோயைப் போக்கும் மருந்தைப் போல, அறிவும் அறநெறியும் மனிதனின் வாழ்வியல் குறைகளைப் போக்கும் என்ற கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளது.

ஏலம், இலவங்கப்பட்டை, நாககேசரம், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகிய ஆறு பொருட்களின் சேர்க்கையால் உருவாகும் மருந்தாகக் குறிப்பிடப்படுகிறது.

**“நிறை உடைமை, நீர்மை உடைமை கொடையே**

**பொறை உடைமை, பொய்ம்மை புலாற்கண் மறை உடைமை**

**வேய் அன்ன தோளாய் இவை உடையான் பல் உயிர்க்கும்**

**தாய் அன்னன் என்னத் தகும்.”**

**(ஏலாதி. பா. 6)**

என்று உடல்நோயைப் போக்கும் மருந்தாக ஏலாதி பயன்பட்டது போல, ஏலாதி நூலில் இடம்பெறும் அறக்கருத்துகள் மனிதனின் உள்ளநோயைப் போக்கும் மருந்தாக அமைந்துள்ளன. இதன்மூலம் பழந்தமிழரின் மருத்துவச் சிந்தனை உடல் நலம் மட்டுமின்றி மனநலம் மற்றும் அறநெறியையும் உள்ளடக்கியதாக இருந்தது காணலாகிறது.

திருவள்ளுவர் மருத்துவத்திற்கென தனி அதிகாரத்தையே அமைத்துள்ளார்.

**“நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்**

**வாய்நாடி வாய்ப்பச் செயல்.”**

**(குறள். 948)**

என்று நோயை அறிதல், அதன் காரணத்தை ஆராய்தல், அதற்கான தீர்வை அறிதல், நோயாளியின் நிலைக்கேற்ப செயல்படுதல் என்ற நான்கு நிலைகளை இக்குறளில் அமைத்துள்ளார்.

**உணவியல் மரபு**

தமிழ் இலக்கியங்களில் உணவு மனித வாழ்வின் அடிப்படைத் தேவையாகும். உணவு பசியைத் தீர்ப்பதற்கான பொருளாக மட்டும் கருதப்படவில்லை. உடல் நலத்துடனும் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. நிலம், நீர், வேளாண்மை, உழைப்பு, விருந்தோம்பல், உடல்நலம், சமூக வாழ்வு ஆகியவற்றோடு உணவு நெருங்கிய தொடர்புடையது.

சங்க இலக்கியங்களில் மக்களின் உணவுப் பழக்கவழக்கங்கள் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. அதில் புறநானூறு போன்ற நூல்கள் அக்கால மக்களின் உலகியல் வாழ்க்கையைப் பதிவு செய்யும் முக்கிய இலக்கியச் சான்றாக விளங்குகிறது.

உணவின் அடிப்படை நிலமும் நீரும் எனும் பொருளை புறநானூற்றுப் பாடலில்,

**“உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**

**நீரும் நிலனும் புணரி யோரீண்டு**

**உடம்பும் உயிரும் படைத்திசினோரே”**

**(புறம். பா. 18)**

என்று உணவு உருவாவதற்கு நிலமும் நீரும் அடிப்படை என எடுத்துரைக்கிறது. நிலத்தில் விளையும் பயிரும், அதனை வளர்க்கும் நீரும் சேர்ந்தால்தான் உயிர்களைக் காக்கும் உணவு கிடைக்கிறது. இதன் வழி, உணவு உற்பத்தியின் அடிப்படையாகிய வேளாண் அறிவும் நீரியல் அறிவும் மக்களிடையே இருந்ததை அறியமுடிகிறது.

எனவே, தமிழ் இலக்கியங்களில் காணப்படும் உணவியல் மரபு மக்கள் என்ன உணவை உண்டனர்? என்பதைக் குறிப்பிடுவது மட்டுமல்ல. உணவு கிடைத்தவிதம், நிலம் மற்றும் நீரின் முக்கியத்துவம், உழைப்புக்கும் உணவுக்கும் உள்ள தொடர்பு, ஆகியவற்றையும் வெளிப்படுத்துகிறது. இதனால் தமிழ் இலக்கியங்கள் மக்களின் உணவு அறிவுக்கும், வாழ்வியல் அறிவுக்கும் சான்றாக விளங்குகின்றது.

**கடல்சார் அறிவு**

நெய்தல் நில வாழ்க்கை கடலை மையமாகக் கொண்டது. மீன்பிடித்தல், படகு, கடற்பயணம், உப்பு உற்பத்தி, கடல்வழி வணிகம் போன்றவை சங்ககால மக்களின் கடல்சார் வாழ்வை வெளிப்படுத்துகின்றன. பட்டினப்பாலை காவிரிப்பூம்பட்டினத்தின் வணிகச் செழிப்பை எடுத்துரைக்கும் பாடல்,

**“நீர்ப்பெயர்ந்து எவ்வம் நீர்பரந்து”**

**(பட்டினப்பாலை. பா. வரி.6)**

எனக் கடல்சார் இயக்கத்தையும் வணிகச் சூழலையும் உணர்த்துவதாக அமைந்துள்ளது. எனவே சங்கத் தமிழ் கடல்சார் வரலாறு, வணிகம், பொருளாதாரம், புவியியல் ஆகிய துறைகளுடன் தொடர்புடைய அறிவையும் பெற்றிருந்ததை அறியமுடிகிறது.

**அரசியல் அறிவு**

சங்க இலக்கியங்களில் அரசியல், ஆட்சிமுறை, மன்னரின் கடமை, நல்லாட்சி, நீதி, குடிமக்கள் நலம், போர், தூதரகம், அமைச்சரவை போன்ற அரசியல் சார்ந்த செய்திகள் பல பதிவாகியுள்ளன. புறநானூறு, பதிற்றுப்பத்து, பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, போன்ற புற இலக்கியங்கள் பழந்தமிழரின் அரசியல் அறிவை எடுத்தியம்புகிறது.

மன்னனின் ஆட்சி அறத்தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற அரசியல் சிந்தனைய்ய மதுரை மருதன் இளநாகனார் புறநானூற்றில் குறிப்பிட்டுள்ளார்.

**“அறநெறி முதற்றே அரசின் கொற்றம்**

**அறன்நெறி பிழையாத் திறனறி மன்னர்”**

**(புறம். பா. 55)**

என்று மன்னனின் வெற்றியானது போரில் பெறும் வெற்றி மட்டுமன்று. அறநெறியைப் பின்பற்றி மக்களை ஆட்சி செய்வதே உண்மையான அரச வெற்றி என்கிறார். இப்பாடல் ஆட்சியின் அடிப்படை அறமாக இருக்க வேண்டும் என்ற தமிழரின் அரசியல் சிந்தனையை எடுத்துரைக்கிறது. எனவே சங்க இலக்கியங்கள் பழந்தமிழரின் அரசியல் அறிவுக்கும் ஆட்சியியல் சிந்தனைக்கும் வரலாற்று ஆவணங்களாக திகழ்கின்றன.

அரசியல் சிந்தனைக்கு முன்னுதாரனமாக திருக்குறளின் பொருட்பாலில் முதல் அதிகாரமான இறைமாட்சி அமைந்துள்ளது.

**“படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்**
**உடையான் அரசருள் ஏறு.”**

**(குறள். 381)**

அரசின் வலிமை படை, குடிமக்கள், பொருளாதார வளம், அமைச்சு, நட்பு, அரண் ஆகிய பல கூறுகளின் ஒருங்கிணைப்பில் அமைகிறது என்று திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். அரசனின் தனிப்பட்ட வீரத்தை மட்டுமே அரசின் வலிமையாகக் கருதாமல், நிர்வாக அமைப்பின் பல கூறுகளை ஒருங்கிணைந்த முறையை எடுத்துரைக்கிறது. இதன்மூலம் தமிழ்ச் சிந்தனையில் அரசியல் அறிவும் நிர்வாக அறிவும் தொன்மையான அடித்தளத்தைக் கொண்டிருந்ததை அறியமுடிகறது.

**தமிழும் இசை அறிவும்**

நம் முன்னோர்களின் பல்துறை வளர்ச்சியில் இசைத்துறையும் முக்கிய பங்காற்றுகிறது. சிலப்பதிகாரம் இசை தொடர்பான விரிவான செய்திகளைத் தரும் காப்பியமாகத் திகழ்கிறது. அரங்கேற்றுக் காதையில் மாதவி நடனமாடும் போது குழல், யாழ், தண்ணுமை, முழவு மற்றும் ஆமந்திரிகை போன்ற பல்வேறு இசைக்கருவிகள் ஒன்றோடு ஒன்று இணைந்து மிக நேர்த்தியாக ஒலித்ததை இளங்கோவடிகள் அழகாக விவரித்துள்ளார்.

**“யாழும் குழலும் சீரும் மிடறும்**
**தாழ்குரல் தண்ணுமை ஆடலொடு இவற்றின்**
**இசைந்த பாடல் இசையுடன் படுத்து**
**வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கித்**
**தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்துத்”**

**(சிலம்பு. அரங்கேற்றுக் காதை. பா.வரி. 139–142)**

என இசைக் கருவிகளின் ஒலிச்சூழலைக் குறிப்பிடும் பகுதிகள் சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ளன. இதனால் மக்களின் இசை மரபை இசையியல், ஒலியியல், நாடகவியல், நடனவியல் போன்ற பல துறைகளோடு இணைத்து ஆய்வு செய்யமுடிகிறது.

**தமிழும் அச்சுத் தொழில்நுட்பமும்**

தமிழின் அறிவுப் பரவலில் அச்சுத் தொழில்நுட்பம் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. ஓலைச்சுவடிகளில் இயற்றிய இலக்கண இலக்கியங்கள் அச்சு வடிவம் பெற்றது. பழந்தமிழ் நூல்களைத் தேடி, சேகரித்து, பதிப்பித்த உ.வே. சாமிநாதையரின் தமிழ்ப்பணி தலைசிறந்ததாகும். அவர் பதிப்பித்த சங்க நூல்கள் இன்று ஆய்வாளர்களுக்கு முதன்மை ஆதாரங்களாக பயன்படுகின்றன.

அவரது **“என் சரித்திரம்”** நூலில் ஓலைச்சுவடிகளைத் தேடி அலைந்த அனுபவங்கள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனை அச்சுத் தொழில்நுட்பத்தின் முக்கியத்துவத்திற்கான வரலாற்றுச் சான்றாகக் கொள்ளலாம். அச்சுத் தொழில்நுட்பம் தமிழின் வளர்ச்சியில் ஊடக மாற்றமாக மட்டும் இல்லாமல், அறிவைப் பாதுகாத்து தலைமுறைகளுக்குக் கடத்தும் அறிவியல் செயல்முறையாகவும் அமைகிறது.

**தமிழும் கணினித் தொழில்நுட்பமும்**

இன்றைய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் கணினி முக்கியப் பங்காற்றி வருகிறது. உலகின் பல்வேறு மொழிகள் கணினித் தொழில்நுட்பத்துடன் இணைந்து வளர்ந்து வருவதுபோல, தமிழும் கணினித் தொழில்நுட்பத்துடன் இணைந்து புதிய பரிமாணத்தைப் பெற்றுள்ளது. தமிழ் எழுத்துகளை கணினியில் உள்ளீடு செய்தல், சேமித்தல், திருத்துதல், அச்சிடுதல், இணையத்தில் பகிர்தல் போன்ற செயல்பாடுகள் தமிழின் பயன்பாட்டை விரிவுபடுத்தியுள்ளன.

**“கணினித் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் தமிழ் தட்டச்சு முறைகள் உருவாகின. தமிழ்99, அஞ்சல், தமிழ் தட்டச்சு போன்ற உள்ளீட்டு முறைகள் தமிழில் கணினிப் பயன்பாட்டை எளிதாக்கின. மேலும், Unicode தொழில்நுட்பத்தின் மூலம் தமிழ் எழுத்துகள் உலகளாவிய கணினி மற்றும் இணையச் சூழலில் ஒருங்கிணைக்கப்பட்டன. இதனால் வெவ்வேறு கணினிகள் மற்றும் இணையத் தளங்களில் தமிழ்த் தகவல்களைப் பரிமாறிக் கொள்வது எளிதானது.”**

**(தமிழ் இணையக் கல்விக்கழகம்)**

கணினி வழித் தமிழ் ஆய்வு இன்று புதிய துறையாக வளர்ந்து வருகிறது. மின்னூல்கள், மின்னிதழ்கள், மின்னணு அகராதிகள், உரைத்தொகுப்புகள், சொல் தேடல் கருவிகள், இயற்கை மொழிச் செயலாக்கம் செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் தமிழ் பயன்படுத்தப்படுகிறது. இதனால் தமிழ் மொழி இலக்கியப் பயன்பாட்டைத் தாண்டி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளிலும் தனது பயன்பாட்டை விரிவுபடுத்தியுள்ளது.

கணினித் தொழில்நுட்பம் தமிழின் பரவலுக்கும் பெரிதும் துணைபுரிகிறது. சமூக ஊடகங்கள், இணையதளங்கள், வலைப்பதிவுகள், காணொளித் தளங்கள் போன்றவற்றின் வழியாகத் தமிழ் உலகளாவிய தொடர்பு மொழியாகவும் பயன்பாட்டு மொழியாகவும் வளர்ந்து வருகிறது. இளம் தலைமுறையினர் தமிழில் எழுதவும் படிக்கவும் பகிரவும் கணினி மற்றும் இணையத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றனர்.

கணினித் தொழில்நுட்பம் தமிழைப் பாதுகாப்பதற்கான கருவியாக மட்டுமன்றி, தமிழை நவீன அறிவியல் உலகுடன் இணைக்கும் பாலமாகவும் விளங்குகிறது. ஓலைச்சுவடியிலிருந்து அச்சு நூலுக்கும், அச்சு நூலிலிருந்து மின்னூலுக்கும், மின்னூலிலிருந்து செயற்கை நுண்ணறிவு வரையிலான தமிழின் பயணம், காலந்தோறும் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொண்டு வளர்ந்து வரும் தமிழின் தனித்துவத்தை வெளிப்படுத்துகிறது.

## முடிவுரை

காலந்தோறும் தமிழ் மொழியும் தமிழ் இலக்கியங்களும் பல்வேறு துறைகளோடு இணைந்து வளர்ந்து வந்துள்ளன. இயற்கை, வேளாண்மை, மருத்துவம், வானியல், நீரியல், விலங்கியல், தாவரவியல், கடல்சார் அறிவு உள்ளிட்ட பல்துறை அறிவுச் செய்திகளைத் தமிழ் இலக்கியங்கள் தம் பதிவுகளின் வழியாக வெளிப்படுத்தியுள்ளன. பழந்தமிழரின் வாழ்வியல் அனுபவங்களும் அறிவியல் சிந்தனைகளும் இலக்கியங்களில் அழகியலோடு இணைந்து பதிவாகியுள்ளன. கால மாற்றத்திற்கேற்ப தமிழ் புதிய அறிவுத் துறைகளையும் தொழில்நுட்பங்களையும் உள்வாங்கிக் கொண்டு தன்னைத் தொடர்ந்து வளப்படுத்தி வருகிறது. குறிப்பாக, கணினி மற்றும் இணையத் தொழில்நுட்ப வளர்ச்சி தமிழின் அறிவுப் பரப்பை உலகளாவிய தளத்திற்கு விரிவுபடுத்தியுள்ளது.

## துணைநூற்பட்டியல்

(1) இளம்பூரணர் உரை, தொல்காப்பியம், பொருளதிகாரம், கௌரா பதிப்பகம்.

சென்னை. 2010.

(2) சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). குறுந்தொகை. டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(3) உ.வே. சாமிநாதையர், புறநானூறு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(4) உ.வே. சாமிநாதையர், அகநானூறு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(5) ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, நற்றிணை, பூம்புகார் பதிப்பகம், சென்னை. 2010.

(6) சாமிநாதையர். உ.வே. (உ.ஆ). பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(7) இராகவையங்கர்.ரா (உ.ஆ). பத்துப்பாட்டு, டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. 2000.

(8) நாமக்கல் கவிஞர் வெ.ராமலிங்கம் பிள்ளை. (உ.ஆ). திருக்குறள். பழனியப்பா பிரதர்ஸ். சென்னை. 2007.

(9) ந.மு. வேங்கடசாமி நாட்டார். சிலப்பதிகாரம். கௌரா பதிப்பகம். சென்னை. 2011.

(10) மு. வரதராசனார், தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்திய அகாதெமி, புதுதில்லி. 2009.

(11) ச. வையாபுரிப்பிள்ளை, தமிழ் இலக்கிய வரலாறு, சென்னை.2000.

(12) தனிநாயக அடிகள், தமிழும் பண்பாடும், தமிழ் ஆய்வு வெளியீடு.2004.

(13) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தமிழ்மொழி மற்றும் இலக்கிய ஆய்வு வெளியீடுகள், சென்னை.2012.

(14) உ.வே. சாமிநாதையர், என் சரித்திரம், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம், சென்னை. https://www.tamilvu.org

(15) தமிழ் இணையக் கல்விக்கழக வெளியீடுகள், சென்னை. https://www.tamilvu.org

(16) தமிழ் இணையக் கல்விக்கழகம், தமிழ் இணையக் கல்விக்கழகப் பாடத்திட்டங்கள் மற்றும் மின்னூலகம், சென்னை. https://www.tamilvu.org

(17) சுப்ரமணியன், கு. வை., கணித்தமிழ், சென்னை, மணிவாசகர் பதிப்பகம். 2011.

(18) மு. பொன்னவைக்கோ, இணையத் தமிழ், சென்னை: பாரதி புத்தகாலயம்.2023.

(19) கண்ணன், க. சங்க இலக்கியத்தில் வாழ்வியல் சிந்தனைகள். நியு செஞ்சுரி புக் ஹவுஸ், 2008.

© 2026 முனைவர் பேபிநிஷாந்தி மெ.. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..